[1983 பிப்ரவரி 4

கள்ளக்குறிச்சியில் கூடுதல் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 126—திரு. சோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கள்ளக்குறிச்சியில் மாவட்ட கூடுதல் நீதிமன்றம் அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மற்றும் (ஆ) தென்னாற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சியில் கூடுதல் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைப்பதற்கான ஆணையை, ஆணை எண். 1187, உள்துறை நாள் 15-5-82-ல் அரசு பிறப்பித்தது. அந்நீதி மன்றம் 30-7-82-லிருந்து செயல்பட்டு வருகிறது.

குளித்தலையில் சார்நிலை நீதிமன்றம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 127—திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலையில் சப்-கோர்ட் அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது துவக்கப்படும்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ; (அ) மற்றும் (ஆ) குளித் தலையில் சார்நிலை நீதிமன்றம் அமைக்கும் திட்டம் உயர்நீதி மன்றத்தின் பரிசீலனையில் இருக்கிறது தேவையான செயற் குறிப்புகள் உயர்நீதி மன்றத்திடமிருந்து பெறப்பட்டதும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. இரா. கருப்பையா : Justice near the people என்ற சொல் வார்கள். நீதிகோரும் மக்கள் அவர்கள் இருக்கும் இடத்திற்கு அருகாமையில் நீதிமன்றங்கள் இருக்கவேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில்தான் ஒவ்வொரு வட்டத்திலும் நீதிமன்றங்கள் அமைக்கவேண்டும் என்ற கொள்கையை தமிழக அரசு ஏற்று அதை நிறைவேற்றி இருக்கிறது. இன்றைய தினம் சப்கோர்ட்டில் நீதி பெறவேண்டும் என்று விரும்புகிற மக்கள் முசிரி, குளித்தலை, மணப்பாறை இவ்விடங்களிலிருந்து கரூர் செல்ல வேண்டியிருக் கிறது. காவிரிப்பாலம் அமைக்கப்பட்ட பிறகு குளித்தலை முசிரி இவற்றை இணைத்து அமைக்கப்பட்ட பிறகு குளித்தலை, முசிரி, மணப்பாறை, துறையூர் இவற்றிற்கு மையமாக இருக்கிற சாரணத் தால் இங்கே ஒரு சப் கோர்ட் அமைத்து இங்குள்ள மக்களுக்கு நீதி அருகாமையிலேயே கிடைக்கக்கூடிய வாய்ப்பை அரசு ஏற்படுத்திக் கொடுக்குமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS